சுபமங்கள ஸ்தோத்ர சீரீஸ் : 2

சந்திர பகவான்

ஆசிரியர் : ஜோதிட கலாநிதி Dr. K. N. சரஸ்வதி

M.A., M.S., M.Ed., Doctorate in Counselling, Diplomas in Naturopathy, Art, Yoga, and Computer



விலை : ரூ. 5-00

நான்காம் பதிப்பு : (ஜனவரி) 1998

கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்
38, நடேச அய்யர் தெரு,
தி. நகர், சென்னை-600 017
போன் : 4343406

எமது இதர ஜோதிஷ நூல் வெளியீடுகள்

நஷ்டஜாதகம்
அஷ்டகவர்க்கம்
அங்கவித்யா என்ற அங்கஆரூடம்
ஜோதிடமும் உங்கள் ஆரோக்கியமும்
சகுனபல நிர்ணயம்
உங்கள் ஆயுளை அறிய வேண்டுமா?
ஜாதகமும் உங்கள் தொழிலும்
ராசிகளில் கோள்களின் நிலைகள்
ஜோதிடமும் சமையற்கலையும்
உங்கள் நட்சத்திரம்
ஜாதகசந்திரிகை (திருமணப் பொருத்தம்)
ஸ்திரீ ஜாதகம்
கோசரபல நிர்ணயம்
யோகங்கள் பலவிதம்
பிரச்ன ஆரூட பலநிர்ணயம்
ஜோதிட அனுபவ ஆராய்ச்சிக் கட்டுரைகள்
ஜாதக தத்துவம்
ஸர்வார்த்த சிந்தாமணி
பராசர ஸம்ஹிதை
புத்திர பாவத்தை அறிய வேண்டுமா?
உடுதசாபலன் (தசாபுக்தி பலன்களுடன்)
ஸராாவளி (மூன்று பாகங்கள்)
ஜினேந்திரமாலை
ஜாதக பலதீபிகா
பிருஹத்ஜாதகம்
ஜாதக த்வாதச பாவபல நிர்ணயம் (3 பாகங்கள்)
ஜாதகாலங்காரம் (இரண்டு பாகங்கள்)
தமிழ் அறுபது ஆண்டுகள்
மனையடி சாஸ்திர நூல்
எண் ஜோதிடம்

சிறுகதைகள், யோகம், ஆன்மிகம், வைத்தியம், சுயமுன்னேற்ற நூல்கள் பற்றி அறிய ரூ. 2/- stamp அனுப்பி தமிழ்/English கேட்லாகுக்கு எழுதவும்.
எல்லா Higginbothams கிளைகளிலும் உங்கள் ஊர் புத்தககடையிலும் கிடைக்கும்.

ஸ்ரீராமஜெயம்

சந்திர பகவான்



'பித்தா, பிறை சூடி பெருமானே!' என்று சிவபெருமானைப் பரவிப் பாடுகிறார் நாவுக்கரசர். பிறைச்சந்திரனைச் சிவன், தன் சடை முடியில் சூடியிருக்கிறான். இதிலிருந்தே சந்திரனின் பெருமை விளங்குகிறது.

பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் அமுதத்துக்காகக் கடைந்த கதை நமக்குத் தெரியும். மந்திரமலையை மத்தாகவும் வாசுகி என்ற நாகத்தைக் கயிறாகவும் உபயோகப்

படுத்தினார்கள். வாசுகியின் தலைப்பாகத்தை அசுரர்களும் வால் பாகத்தைத் தேவர்களும் பிடித்துக் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள். இழுபடும் துன்பத்தைப் பொறுக்க மாட்டாமல் பாம்பு அனல் வீசும் நஞ்சை உமிழ்ந்தது; தலைப் பக்கம் பிடித்திருந்த அசுரர்கள், அந்த நஞ்சின் காங்கை தாங்காமல் மயக்கமுற்றனர். வால்பக்கம் பிடித்திருந்த தேவர்களும் நஞ்சின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தனர். சிவ பெருமான் அந்த நஞ்சை உண்டு அவர்களைக் காப்பாற்றியருளினார். இருந்தாலும் அந்த ஆலகால விஷத்தின் வெம்மையைக் குறைத்தவன் சந்திரன். தன்னுடைய அமிர்தக் கலைகளால் காங்கையை மாற்றினான். தேவர்கள் பிழைத்தெழுந்தனர்.

பாற்கடலைக் கடைந்தபோது, பல பொருள்கள் வெளிவந்தன: அமிர்தத்துடன் வெளிவந்தவன் சந்திரன்; அமிர்த சம்பந்தத்தால் சந்திரனின் நிலா முழுமையாக, இனிமையாக, அமுதமாக இருக்கிறது. சூரிய ஒளியைப் பிரதிபலித்தாலும் சந்திரனின் தன்மைக்கு இதுவே காரணம். ''அந்தியாரண மந்திரத் தன்புடன் இவனை வந்தியாதவர் மண்ணிலும் வானிலும் இல்லை'' என்று பாடுகிறார் வில்லிபுத்தூரார். ஆரணம் என்றால் வேதம். வேதமும் வணங்கும் சிவபெருமானின் தலையில் ஒப்பிலாப் பிறைமதி இருக்கிறான். இவனை வணங்குபவர்கள் எல்லோரும் அவனையும் வணங்குவதாகத்தானே அர்த்தம்.

நவகோள்களில் பூமிக்கு மிக அருகில் இருப்பது சந்திரன் தான். பூமியின் உபக்கிரகம் அது, சந்திரன் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு பூமியையும் சுற்றி வருகிறது. அதனால் சந்திரனின் ஒரு பாகமே எப்பொழுதும் பூமிக்குத் தெரியும் நிலை ஏற்படுகிறது; மற்றொரு பகுதி தெரிவதே இல்லை; சந்திரனின் குறுக்களவு சுமார் 1080 மைல்கள்

தாம். பூமியிலிருந்து சுமார் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் மைல் தொலைவில் உள்ளது சந்திரன்.

பிற கோள்களுக்குச் செல்லும் அமெரிக்க-ரஷியப் போட்டியில் அமெரிக்க வெற்றியடைந்திருக்கிறது. மூன்று விண்வெளி வீரர்களை அப்போலோ கப்பலில் அனுப்பி, சந்திரனின் இருண்ட பகுதியில் இறங்கி, அங்கிருந்து மண், கல் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு திரும்பி வரச் செய்திருக்கின்றனர். அங்கே பிராணவாயு இல்லாததால் தண்ணீரும் இல்லை. உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை அங்கே கிடையாது. அமெரிக்க விண்வெளி வீரர்கள் மூவரும் சந்திரனில் போய் இறங்கியது 1965-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21-ஆம் தேதி. சந்திரனிலிருந்து கொண்டு வந்த பொருள்களை விண்ணுலக ஆராய்ச்சிச் சாலைகளில் சோதித்துப் பார்த்து, தங்கமும் வெள்ளியும் அங்கே அதிகம் இருக்கலாம் என்று ஊஹித்திருக்கிறார்கள்; இவை விஞ்ஞான பூர்வமான சந்திரனைப் பற்றிய ஆராய்ச்சி.

சந்திரனைப் பற்றி நம் புராணங்களில் நிறைய கதைகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்:

ஒரு கிழவிக்கு நான்கு குழந்தைகள் இருந்தனர். சூரியன் சந்திரன் வருணன் வாயு என்பது அவர்களின் பெயர்கள். ஒரு பணக்காரன் இந்தக் குழந்தைகளைத் தன் வீட்டுக் கல்யாணத்திற்குச் சாப்பிட அழைத்திருந்தான். "நல்ல இனிப்புப் பட்சணங்களாகப் போட்டால் தனக்கும் சிலவற்றைக் கொண்டு வருமாறு கூறி, கிழவி, தன் குழந்தைகளை அந்த விருந்துக்கு அனுப்பி வைத்தாள். நான்கு பேரும் போய் நன்றாகச் சாப்பிட்டார்கள். ஆனால் சந்திரன் மட்டும், தன் தாய்க்காகச் சிலவற்றை எடுத்து மறைத்து வைத்துக் கொண்டான். மற்ற மூவரும் எல்லாவற்றையும் அங்கேயே தின்று விட்டார்கள்.

அவர்கள் திரும்பி வந்ததும், கிழவி, சூரியனைக் கூப்பிட்டுக்கேட்டாள். ''விருந்தில் இனிப்பே பரிமாறவில்லை'' என்று பொய் சொல்லிவிட்டான் சூரியன். ''மிகவும் கொஞ்சந்தான் போட்டார்கள். அதனால் அங்கேயே சாப்பிட்டுவிட்டேன்'' என்று கூறினான் வருணன்.

''நீ கேட்டதையே மறந்து விட்டேன்'' என்று பதில் அளித்தான் வாயு. கடைசியில் சந்திரன் மட்டும், தான் மறைத்து எடுத்து வந்த இனிப்புகளைத் தாயிடம் கொடுத்தான். மகிழ்ச்சி அடைந்த தாய், சந்திரனை அப்படியே கட்டிக் கொண்டு, ''உன்னை உலகமே கொண்டாடும்; உன்னைக் கண்டு மகிழும்'' என்று வரம் அளித்தாள். பொய் சொல்லி ஏமாற்றிய மூன்று பிள்ளைகளையும் பார்த்து ''உங்களை உலகம் என்றைக்கும் இகழ்ந்து கொண்டே இருக்கும்'' என்று கூறினாள்.

வெயில் தாங்காமல் சூரியனை மக்கள் சாடுவதற்கும், விடா மழை பெய்தால் வருணனைக் கடிந்து கொள்வதற்கும் புயல் அடித்தால் வாயுவை இகழ்வதற்கும், அவர்களுடைய அன்னையின் இந்தச் சாபமே காரணம். பெரியோர்களும், சிறுவர்களும், கவிகளும், காதலர்களும் சந்திர உதயத்தைக் கண்டு மகிழ்வதற்கும் காரணம் இதுதான்.

வேதம் சந்திரனை ஸோமன் என்றும் சந்திரமா என்றும் அழைக்கின்றது. அமிர்தத்தை வர்ஷித்து, செடிகளும் மூலிகைகளும் வளமாக வளர உதவுகிறான் சந்திரன்.

கந்தர்வ மன்னன் ஒருவன் ஒரு சமயம் சந்திரனைச் சிறைப்படுத்தி விட்டான். அமிர்ததாரை இல்லாமல் தேவர்களும் முனிவர்களும் சிரமப்பட்டார்கள். ஸோமனை விடுவிக்க அவர்கள் ஒரு உபாயத்தை மேற்கொண்டனர். வாக்கை (சொல்லை) அவர்கள் ஓர் அழகியாக ஆக்கி,

கந்தர்வ மன்னனிடம் அனுப்பினார்கள். அந்த அழகியின் எழிலில் மயங்கிய மன்னன் ஸோமனை விடுவித்து விட்டான். ஐதரேய பிராமணத்தில் இந்தச் செய்திகிடைக்கிறது.

காயத்திரியின் உதவியால் ஸோமனை மண்ணுலகுக்குக் கொண்டு வந்ததாகச் சதபத பிராம்மணம் கூறுகிறது.

தைத்திரீய உபநிஷத்தில் ஸோமனைப் பற்றிய இன்னொரு கதை இருக்கிறது: பிரஜாபதியின் பெண்களை ஸோமன் திருமணம் செய்து கொண்டான். அந்தப் பெண்களில் ரோஹிணீ என்று ஒருத்தி இருந்தாள். அவளுடைய அழகில் மயங்கிய ஸோமன் அவளிடம் மட்டும் விசேஷ அன்பு காட்டிப் பரிவுடன் நடந்து கொண்டான். இதனால் மற்றப் பெண்கள் கோபம் கொண்டு தங்கள் கணவன் மனைவிமாரிடையே பாரபட்சம் காட்டுவதாகத் தங்கள் தந்தை பிரஜாபதியிடம் முறையிட்டுக் கொண்டார்கள். மாமனார் வந்து ஸோமனைக் கேட்டார். எல்லா மனைவிகளிடமும் ஒரே விதமாக அன்புகாட்டிப் பழகுவதாகவும், இனிமேலும் அப்படியே நடந்து கொள்வதாகவும் ஸோமன் கூறினான். ஆனால் சொன்னபடி அவன் நடந்து கொள்ளவில்லை. ரோஹிணியிடம் மட்டும் அதிக அன்பாக இருந்தான். உண்மையை உணர்ந்த பிரஜாபதி, தம் மருமகப் பிள்ளைக்கே சாபம் கொடுத்து விட்டார். அதனால் சந்திரனின் கலை குறையத் தொடங்கியது. தகப்பனாரின் சாபத்தை உணர்ந்த மற்றப் பெண்களும் சூரியனும் பிரஜாபதியை வேண்டிக் கொண்டனர். அது முதல் பதினைந்து நாள் குறைவதும் பதினைந்து நாள் வளருவதுமாக ஸோமன் மாறினான்.

இதே உபநிஷத்தில் இன்னொரு கதையும் உள்ளது. பிரஜாபதி மூன்று வேதங்களையும் வெளியிட்டவுடன் ஸோமன் அவற்றைத் திருடிக் கொண்டு போய்விட்டான். பிரஜாபதிக்கு இரண்டு பெண்கள்: சாவித்திரி, ச்ரத்தா

என்று: ஸோமன் இரண்டாவது பெண்ணை மணக்க விரும்பினான். அதனால் கோபமடைந்த மூத்தவள் சாவித்திரி தன் தந்தையிடம் போய் முறையிட்டாள். பிரஜாபதி ஒரு தந்திரம் செய்தார். மந்திரிக்கப்பட்ட குங்குமத்தை அவள் நெற்றியில் இட்டு, ஸோமனிடம் அனுப்பி வைத்தார். ஸோமன் அவள் அழகில் மயங்கி அவளை மணந்து கொண்டதுடன் மூன்று வேதங்களையும் திருப்பித் தந்துவிட்டான்.

''அதிர்ஷ்டத்தையும், வீரர்களுக்கு வீரத்தையும் மூலிகைகளும் மருத்துவக் குணத்தையும்'' ஸோமன் வழங்குவதாக யஜுர் வேதம் கூறுகிறது.

தக்ஷனுடைய இருபத்தேழு பெண்களையும் சந்திரன் மணந்ததாகவும் ரோஹிணியிடம் மட்டும் அதிக அன்பு பாராட்டியதாகவும் அதனால் தக்ஷன் கோபமுற்று, சந்திரனைச் சபித்து விட்டதாகவும் கூறுவார்கள். இந்த இருபத்தேழு பெண்களின் பெயர்கள் அசுவினி, பரணி என்ற நட்சத்திரங்களின் பெயர்கள்தாம்.

நாரதர் சிவபெருமானிடம் ஒரு மாம்பழத்தை அளித்தார். அந்தப் பழத்தை வாங்கி, கணபதி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் சாப்பிடுவதைப் பார்த்துக் கேலியாகச் சந்திரன் சிரித்தான். இதனால் கோபமுற்ற கணபதி கலை மங்கிப் போய்விடுமாறு சந்திரனை சபித்துவிடுகிறார். சந்திரன் ஒளியற்ற பிண்டமாய் மாறியதும் சிவபெருமானும் நாரதரும் வேண்டிக் கொள்ள கணபதி தம் சாபத்தின் தன்மையை மாற்றினார். ஆவணி மாதத்தில் சுக்லபட்ச நாலாம் பிறைச்சந்திரன் மட்டும் சண்டாளனாக விளங்குவான் என்று கூறுகிறார். மேற்குத் திக்கில் நாலாம்பிறை சந்திரனைப் பார்க்கக்கூடாது என்ற பழக்கமும் நம்மிடையே இன்றும் இருக்கிறது. ''நாலாம் பிறைச் சந்திரனைப் பார்த்தால் நாய்பட்ட பாடு படுவர்'' என்ற பழமொழியே நிலவுகிறது.

பிருஹஸ்பதியின் மனைவி தாராவுக்கும் சந்திரனுக்கும் பிறந்தவன் தான் புதன். இந்தத் தகாத தொடர்பால் அசுரர்களுக்கும் கடவுளர்களுக்கும் நீண்ட சண்டை நடந்தது. இறுதியில் தாரா தன் கணவனிடம் போய்ச் சேருகிறாள். தன்னுடைய அமிர்தக் கலைகளால் முதல் பதினைந்து நாட்கள் கடவுளர்களை மகிழ்ச்சியுறச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்குச் சந்திரன் கட்டுப்படுகிறான். சூரியனுடைய சுகம்னாக் கிரணங்கள் சந்திரனுக்கு ஒளியூட்டுகின்றன.

நவக்கிரகங்களுடன் சந்திரனை வழிபடுவதற்கு சந்திரனின் சிலைகளைச் செய்யும் முறைகளை ஆகமசாஸ்திரங்கள் விரிவாகக் கூறுகின்றன.

நவக்கிரஹ ஸ்தோத்திர சங்க்ரஹம் என்ற நூலில் சந்திரனுக்கு இருபத்தெட்டுப் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன: வாழ்வுக்கு வேண்டிய அமிர்தத்தை அளிப்பதால் சுதாகரன் என்றும், குமுதம் சந்திரனைக் கண்டு மலர்வதால் குமுதப்பிரியன் என்றும், சசி, சஸாங்கன் என்றும், ரோஹிணியிடம் அதிகம் பிரியம் வைத்திருப்பதால் ரோஹிணீபதி என்றும், பனியை உண்டாக்குவதால் ஹிமாகரன் என்றும், பிராம்மணர்களின் தலைவன் என்பதால் த்விஜராஜா என்றும், இரவு வேளைக்கு அதிபன் என்பதால் நிசாகரன் என்றும், மூலிகைகளுக்கு உயிரூட்டுவதால் ஔஷதீசன் என்றும், இருபத்தேழு நட்சத்திரங்களையும் மனைவியாகக் கொண்டதால் நட்சத்திர நாயகன் என்றும் அவன் அழைக்கப்படுகிறான்.

சந்திரன் மனித உடலில் ஆதிக்கம் செலுத்துவதைப் பற்றி அரிஸ்டாடில் கூறியிருக்கிறார்: "கோள்களின் கதியை நன்கு அறியாமல் எந்த மருத்துவராலும் சரியாக மருத்துவம் செய்ய முடியாது" என்று மருத்துவத் தந்தை ஹிப்போகிரடீஸ் கூறியிருக்கிறார். மனக்கோட்டத்துக்கும்

நிலா வொளிக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறும் சர்ச்சை இன்றும் நடக்கிறது. ஆங்கிலச் சொல் லூனா (Luna) என்றால் சந்திரன். 'லூனடிக்' (Lunatic) என்றால் பைத்தியம். 'லூனா' என்ற சொல்லிலிருந்துதான் 'லூனடிக்' என்ற சொல்லே வந்திருக்கிறது.

ராசிச் சக்கரத்தில் கடகம் சந்திரனின் ஆட்சி வீடு; ரிஷபம் உச்ச வீடு; துலாம் நீச வீடு. தகரம் சந்திரனுக்கு உகந்த உலோகம். மோதிரத்தில் நல்முத்தை வைத்துக் கட்டிப் போட்டுக் கொண்டால் நல்லது.

ஃ ஃ ஃ

திருவையாறு கும்பகோணம் பஸ் தடத்தில் திருவையாற்றிலிருந்து சுமார் எட்டுக் கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருப்பழனத்துக்கு அருகில் ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் திங்களூர் என்ற தேவாரம் வைப்புத் தலம் இருக்கிறது. வைப்புத் தலம் என்பது தேவாரப் பாடல் பெறாமல் பிற தலங்களைப் பற்றிப் பாடியுள்ள தேவாரப் பாடல்களில், தலத்தைப் பற்றிய குறிப்பு மட்டும் இருக்கும் தலம்.

திங்கள் என்றால் சந்திரன்; அவனுடைய பெயராலேயே இந்தத் தலம் விளங்குகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் அப்பூதி அடிகள் அவதரித்த தலம் அது. இறைவனை நேரிடையாக வணங்காமல் இறையடியார்களை வணங்கிப் போற்றிய சிலர் நாயன்மரர் ஆகும் பேறு பெற்றனர். கல்லுடன் கட்டிக் கடலில் இடப்பட்ட திருநாவுக்கரசர், இறையருளால் மிதந்து வந்த அதிசயத்தைக் கேட்டு, அவரையே வணங்கிப் பேறு பெற்றவர் அப்பூதியடிகள். தம் பிள்ளை, வீடு, மாடு, கன்று எல்லாவற்றுக்கும் திருநாவுக்கரசர் என்ற பெயரைச் சூட்டியே மகிழ்ந்த அன்பர் அப்பூதி

யடிகள். இத்தனைக்கும் அவர் திருநாவுக்கரசரை முன்பு நேரில் பார்த்ததில்லை. பின்னாளில்தான் சந்தித்து இறை யநுபூதியைப் பெறுகிறார். தம் வீட்டிலுள்ள படி மரக் கால், எடைக்கற்கள், பசு, எருமை, எல்லாவற்றுக்கும் திரு நாவுக்கரசர் என்று பெயர் வைத்து விட்டார் என்று பாடு கிறார் சேக்கிழார். இந்தத் திருத்தலத்து மூர்த்தியைப் பூசித்துச் சந்திரன் பேறு பெற்றான் என்று புராணங்கள் கூறுகின்றன.

அடுத்ததாக, திருப்பதி வேங்கடாசலபதியின் அருள் திருமேனியில் சந்திரனின் அருளும் இணைந்து வீசுகிறது என்பார்கள். திருப்பதி ஏழுமலையானைத் தரிசிக்காத பக்தர்களைக் காண முடியாது. கண்கண்ட தெய்வமாக அவரை வணங்கிப் போற்றும் குடும்பங்கள் பல உள்ளன. தென்னகத்தில் மட்டும் அல்ல, வட இந்திய மக்களும் ஆண்டுதோறும் வழக்கமாகத் திருப்பதி வந்து பெருமானை தரிசித்துப் பயன் அடைகிறார்கள்.

திருமலைக்குச் சென்று ஏழுமலையானைத் தரிசித்த பக்தர்கள், திருப்பதிக்குப் பக்கத்திலுள்ள திருச்சானூர் சென்று அலர்மேல் மங்கையையும் தரிசித்தால்தான் எண் ணிய காரியம் நிறைவேறும், அதுதான் தரிசன முறை என் றும் தலபுராணம் கூறுகிறது. தாயாரைச் சேவிக்காமல் வரலாமா? தாயாரின் கருணையும் சேர்ந்தால்தான் பெரு மானின் அருள் முழுதுமாகக் கிடைக்கும்.

இந்த முறைப்படி தரிசனம் செய்தால் பெருமானின் அருளினால் சந்திரனும் நல்ல பலன்களையே அளிப்பான் என்றும் தலபுராணம் கூறுகிறது. திருப்பதி வேங்கடாசல பதியைக் குலதெய்வமாகக் கொண்டாடி வணங்கும் குடும் பங்களுக்குச் சந்திரனின் அருள் பெருகும் என்று சொல்வார் கள். கோசரத்திலோ ஜாதகத்திலோ சந்திரன் சரியாக அமையப் பெறாதவர்கள் திருப்பதிப் பெருமானைச் சேவித்து வருவது நல்லது.

ஸோமனை முடியில் தரித்திருப்பதால் சோமசுந்தரன் என்ற திருநாமம் பெற்றான் ஆலவாய் இறைவன்.

ஜாதகத்திலோ கோசரத்திலோ சந்திரன் நன்றாக அமைந்திராவிடில் அவனைப் பூசித்து வணங்கித் துன்பத்தைக் குறைத்துக் கொள்ளும் வழிமுறைகளை நவக்கிரக ஆராதனை என்ற நவக்கிரகங்களைப் போற்றி வணங்கும் முறைகளைச் சொல்லுகிற எமது நூலைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்; பயன் பெறலாம்; பரிகாரம் செய்து கொள்ளலாம்.

சந்திரக் கிரகம் நன்றாக அமையாத அன்பர்களின் நலனுக்காக அந்த நூலில் சந்திரன் சம்பந்தப்பட்ட ஸ்தோத்திரங்களையும், கவசத்தையும் அஷ்டோத்தர சதநாம அர்ச்சனையையும் கீழே கொடுத்திருக்கிறோம்.

குறிப்பு:- பிற கோள்களைப் பற்றிய ஸ்தோத்திரம், கவசம், மந்திரம், சதநாம அர்ச்சனை ஆகியவை அடங்கிய ஒவ்வொரு தனி நூலும் மலிவான விலையில் எங்களிடம் கிடைக்கும்.

சந்திரனுக்குரிய காயத்திரி

பத்மத்ஜ்வாய வித்மஹே ஹேமரூபாய தீமஹி
தந்நः ஸோமः ப்ரசோதயாத் ||

சந்திரனின் ஸ்துதி

ததிஸங்க துஷாராபம் க்ஷீரோதார்ணவ-ஸம்பவம்
நமாமி ஶஶிநம் ஸோமம் ஶம்போர் மகுட பூஷணம் ||

சந்திரனின் மந்த்ரம்

ஓம் அஸ்ய ஸ்ரீ ஆப்யாயஸ்வேதி ஸோம மஹாமந்த்ரஸ்ய —கௌதமருஷி: | காயத்ரீச் சந்த:, ஸோமோ தேவதா,

ஸாம் பீஜம், ஸீம் சக்தி:, ஸௌம் கீலகம், மம ஸ்ரீ ஸோம ப்ரஸாத ஸித்யர்த்தம் ஜபே விநியோக: |

(அத கரந்யாஸ:) ஸோமாய அங்குஷ்ட்டாப்யாம் நம: | நிஸாகராய தர்ஜனீப்யாம் ஸ்வாஹா | க்ஷீரோதார்ணவ ஸம்பவாய மத்யமாப்யாம் வஷட் | லக்ஷ்மீ ஸஹோதராய அனாமிகாப்யாம் ஹூம் | தாரகேஸாய கனிஷ்ட்டிகாப் யாம் வௌஷட் | ஸுதாமூர்தயே கரதல கரப்ருஷ்ட்டாப் யாம் பட் |

அங்கன்யாஸ:) ஸோமாய ஹ்ருதயாய நம: | நிஸாக ராயஸிரஸே ஸ்வாஹா | க்ஷீரோதார்ணவ ஸம்பவாய ஸிகாயை வஷட் | லக்ஷ்மீ ஸஹோதராய கவசாய ஹூம் | தாரகேஸாய நேத்ரத்ரயாய வௌஷட் | ஸுதாமூர்தயே அஸ்த்ராயபட் | பூர்ப்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த: |

(த்யானம்) கதாயுத தரம் தேவம் ஸ்வேத வர்ணம் நிஸாகரம் | த்யாயேத் அம்ருதஸம்பூதம் ஸர்வகாமபலப்ர தம் | (லமித்யாதினா மானஸ பூஜா கார்யா)

(மந்த்ர:) ஆப்யாயஸ்வ ஸமேதுதே விஸ்வதஸ் ஸோம வ்ருஷ்ணியம் | பவா வாஜஸ்ய ஸங்கதே ||

சந்திரனின் கவசம்

ஓம் அஸ்யஸ்ரீ சந்த்ர கவச ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய கௌதம ரிஷி:, அனுஷ்டுப் ச்சந்த:, ஸோமோ தேவதா, ரம் பீஜம், ஸம் ஸக்தி:, ஓம் கீலகம், மம ஸோமக்ஹ்ர-ப்ரஸாதஸித்யர்த்தே ஜபே விநியோக: | (கரன்யாஸ:) வாம் அங்குஷ்ட்டாப்யாம் நம: | வீம் தர்ஜனீப்யாம் நம: | வூம் மத்யமாப்யாம் நம: | வைம் அனாமிகாப்யாம் நம: | வ: கரதல கரப்ருஷ்ட்டாப்யாம் நம: |

(அங்கந்யாஸ:) வாம் ஹ்ருதயாய நம: | வீம் ஸிரஸே ஸ்வாஹா | வூம் ஸிகாயை வஷட் | வைம் கவசாய ஹூம் | வௌம் நேத்ரத்ரயாய வௌஷட் | வ: அஸ்த்ராய பட் | பூர்ப்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த: |

(த்யானம்) ஸோமம் த்விபுஜ பத்மம் ச முக்தாபரண பூஷணம் | ச்வேதாச்வரதமாருடம் மேரும் | யாந்தம் ப்ர தக்ஷிணம் | சுப்ரம் சதுர்புஜம் தேவம் கேயூர மகுட உஜ்வலம் | வாஸுதேவஸ்ய நயனம் சங்கரஸ்ய்ச பூஷணம் | யேவம் த்யாத்வா ஜபேத் நித்யம் சந்த்ரஸ்ய கவசம் முதா |

(அத கவசம்) சசீ பாது சிரோதேசம் பாலம் பாது கலாநிதி: | சக்ஷுஷீ சந்த்ரமா: பாது | ச்ருதிம் பாது கலாத்மக: | க்ராணம் பக்ஷ-கர: பாது முகம் குமுத-பாந்தவ: | ஸோம: கரௌ து மே பாது ஸ்கந்தௌ பாது ஸுதாத்மக: | உரோ மே அத்ரிஜநி: பாது மத்யம் பாது நிசாகர: | கடிம் சுதாகர: பாது பாதுஊரு சசலாம்சன: | ம்ருகாங்கோ ஜானுனீ பாது ஜங்கேபாது அம்ருதாப்திஜ: | பாதௌ ஹிம்கர: பாது சந்த்ர: அகிலம் வபு:

(பலச்ருதி:) ஏதத்தி கவசம் புண்யம் புக்தி முக்தி ப்ரதாயகம் | ய: படேத் ச்ருணுயாத் வாபி ஸர்வத்ர விஜயீ பவேத் | இதி ஸ்ரீ ப்ரம்ஹ-வைவர்தே மஹாபுராணே உத்தர காண்டே சந்த்ர கவசம் ஸம்பூர்ணம் ||

சந்திரனின் ஸ்தோத்திரம்

அஸ்யஸ்ரீ சந்த்ர ஸ்தோத்ர மஹா மந்த்ரஸ்ய—கௌதமரிஷி:, அனுஷ்டுப் சந்த:, சந்த்ரோ தேவதா, சந்த்ர க்ரஹ ப்ரஸாத ஸித்யர்த்தம் ஜபே வினியோக: |

(ஷடங்கந்யாஸ கராதிந்யாஸ:) | பூர்புவஸ்ஸுவரோமிதி திக்பந்த: | (த்யானம்) ச்வேதாம்பர அன்விததனும் வர சுப்ர வர்ணம் ச்வேதாச்வ யுக்த ரதகம் ஸுர ஸேவிதாங்க்ரிம் | தோர்ப்யாம் த்ருதா பயவரம் வரதம் ஸுதாம்சம் ஸ்ரீவத்ஸ மௌக்திக தரம் ப்ரணமாமி சந்த்ரம் | சந்த்ரம் சதுர்புஜம் தேவம் கேயூர மகுட உஜ்வலம் வாஸுதேவஸ்ய நயனம் சங்கரஸ்ய விபூஷணம் | ச்வேதமால்யாம்பர தரம் ச்வேத கந்தானு லேபனம் | ச்வேச்சத்ரதரம் வந்தே ஸர்வாபரண பூஷிதம் |

(அத ஸ்தோத்ரம்) ஆக்னேய பாகே ஸரதோத சாஸ்வச்சாத்ரேயஜோ யாமுன தேசகச்ச | ப்ரத்யங் முகஸ்த்த: சதுரச்ரபீடே சுதாதரோ நோ அவது ரோஹிணீச: | சந்த்ரம் நமாமி வரதம் சங்கரஸ்ய விபூஷணம் | கலாநிதிம் காந்தரூபம் கேயூர மகுடோஜ் ஜ்வலம்ச வரதம் வந்த்ய சரணம் வாஸுதேவஸ்ய லோசனம் | ஸர்வ லோகாலே சனகம் சந்த்ரம் தம் ப்ரணதோஸ்மி அஹம் | ச்வேதச் சத்ர லஸன் மௌளிம் சசினம் ப்ரணமாம்யஹம் | ஸர்வம் ஜகத் ஜீவயஸி ஸுதார ஸமயை: கரை: | ஸோம தேஹ மமா ரோக்யம் ஸுதா பூரித மண்டல | ராஜாத்வம் ப்ராம்ஹணானாம் ச ரமாயா அபிஸோதர: | ஒஷதீனாம் ச அதிபதீ ரக்ஷ மாம் ரஜனீபதே | கல்யாண மூர்தே வரத கருணாரஸவாரிதே | கலச உத்தி ஸம்ஜாத கலாநாத க்ருபாம் குரு | க்ஷீரார்ணவ ஸமுத்பூத சிந்தாமணி ஸஹோத்பவ | காமித அர்த்தான் ப்ரதேஹி த்வம் கல்பத்ரும ஸஹோதர || ச்வேதாம்பர: ச்வேத விபூஷணாட்யோக தாதர: ச்வேத ருசிஹி த்விபாஹு: சந்த்ர: ஸுதாத்மா வரத: கிரீடி ச்ரேயாம்ஸி மஹ்யம் ப்ரததாது தேவ: ||

க்ஷயாபஸ்மார குஷ்டாதி தாபஜ்வர நிவாரணம் | ஸர்வ ஸம்பதம் ஆப்நோதி ஸ்தோத்ர பாடான்ன ஸம்சய: இதம் நிசாகர ஸ்தோத்ரம் ய: படேத் ஸததம் நர: | உபத்ரவாத் ஸ முச்யேத நாத்ர கார்யா விசாரணா |

இதி ப்ரம்ஹாண்ட புராணே நவமாம்ஸ உமா மகேச்வர ஸம்வாதே சந்த்ர ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம் |

சந்திர அஷ்டோத்தர சத நாமாவளி

(அர்ச்சனை செய்யும் போது நாமாவின் முதலில் ''ஓம்'' என்றும் இறுதியில் ''நம:'' என்றும் சேர்த்து அர்ச்சிக்கவும்.)

ஓம் ஶஶதராய
,, சந்த்ராய
,, தாராதீஶாய
நிஶாகராய
ஸுதாநிதயே
ஸதாராத்யாய
ஸத்பதயே
ஸாதுபூஜிதாய
ஜிதேந்த்ராய
ஜயோத்யோகாய 10
ஜ்யோதிச்சக்ர ப்ரவர்த்தகாய
விகர்த்தநாநுஜாய
வீராய
விச்வேஶாய
விதுஷாம் பதயே
தோஷாகராய
துஷ்டதூராய
ஶிஷ்டபாலகாய
புஷ்டிமதே
அஷ்டமூர்த்திப்ரியாய 20
அனந்தாய
கஷ்டதாரு குடாரகாய
ஓம் ஸ்வப்ரகாஶாய நம:
ப்ரகாஶாத்மனே
த்யுசராய
தேவபோஜனாய
கலாதராய
காலஹேதவே
காமக்ருதே
காமதாயகாய 30

ஓம் ம்ருத்யு ஸம்ஹாரகாய
,, அமர்த்யாய
நித்யானுஷ்ட்டானதாயகாய
க்ஷமாகராய
க்ஷீணபாபாய
க்ஷயவ்ருத்திஸமன்விதாய
ஜைவாத்ருகாய
ஶுசயே
ஶுப்ராய 40
ஜயிநே
ஜய பலப்ரதாய
ஸுதாமயாய
ஸுரஸ்வாமிநே
பக்தானாமிஷ்டதாயகாய
பக்திதாய
புத்திதாய
பத்ராய
பக்த தாரித்ர்ய பஞ்ஜனாய
ஸாமகானப்ரியாய
ஸர்வரக்ஷகாய 50
ஸாகரோத்பவாய
பயாந்தக்ருதே
பக்திகம்யாய
பவபந்த-விமோசகாய
ஜகத்ப்ரகாஶ-கிரணாய
ஜகதானந்தகாரணாய
நிஸ்ஸபத்னாய
நிராஹாராய
நிர்விகாராய
நிராமயாய 60

ஓம் பூச்சாயா ச்சாதிதாய
பவ்யாய
புவனப்ரதிபாலகாய
ஸகலார்திஹராய
ஸௌம்யஜனகாய
ஸாதுவந்திதாய
ஸர்வாகமஞாய
ஸர்வக்ஞாய
ஸநகாதிமுனிஸ்துதாய 70
ஸிதச்சத்ரத்வஜோபேதாய
ஸிதாங்காய
ஸித பூஷணாய
ஶ்வேத மால்யா
அம்பரதராய
ஶ்வேதகந்தானு-
லேபனாய
தஶாஸ்வரதஸம்ரூடாய
தண்டபாணயே
தனுர்த்தராய
குந்தபுஷ்போஜ்வலா
காராய
நயனாப்ஜ ஸமுத்பவாய 80
ஆத்ரேய கோத்ரஜாய
அத்யந்த விநயாய
ப்ரிய தாயகாய
கருணாரஸஸம்பூர்ணாய
கர்கடப்ரபவே
ஓம் அவ்யயாய
சதுரச்ராஸனாரூடாய
சதுராய
திவ்ய வாஹனாய
விவஸ்வன் மண்டலாக்
ஞேயவாஸாய
வஸுஸம்ருத்திதாய
மகேஶ்வர-ப்ரியாய
தாந்தாய
மேருகோத்ரப்ரதக்ஷிணாய
க்ரஹ மண்டல-
மத்யஸ்த்தாய
க்ரஸிதார்காய
க்ரஹாதிபாய
த்விஜராஜாய
த்யுதிலகாய
த்விபுஜாய
த்விஜபூஜிதாய 100
ஔதும்பரநகாவாஸாய நம:
உதாராய
ரோஹிணீபதயே
நித்யோதயாய
முனிஸ்துத்யாய
நித்யாநந்தபலப்ரதாய
ஸகலாஹ்லாதனகராய
பலாசேத்மப்ரியாய

ஸ்ரீ சந்திர அஷ்டோத்தர சத நாமாவளி முற்றும்

ஒரு நற்செய்தி!

ஆன்மிக மக்கள் ஆவலுடன்

எதிர்பார்த்த அரிய நூல்கள்

மந்திரப் பிரச்னம்

(விரிவான தமிழுரையுடன் வெளிவந்துவிட்டது)

பிரும்ம சூத்ர சங்கர பாஷ்யம்

(ஸ்ரீ சங்கரரின் வ்யாக்யானத்தைத் தழுவிய விரிவான தமிழுரையுடன்) (Royal Crown Size.)

(1500 பக்கங்கள் கொண்ட 4 அத்யாயங்களும் 3 வால்யூம்களாக வெளிவந்து விட்டன.)

உபநிஷத்துக்கள்

(விரிவான தமிழுரையுடன் வெளிவந்துவிட்டன.)

1. காடகோபநிஷத் 2. ஈச-கேன உபநிஷத்
3. தைத்திரீயோபநிஷத்

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீ நாராயணீயத்துடன் இணைந்தது.

4200 பக்கங்கள் கொண்ட 12 ஸ்கந்தங்களும் 7 வால்யூம்களாக வெளிவந்துவிட்டன.

(மூல சுலோகங்களும், விரிவான ஸ்ரீதரீய, வம்சிதரீய வ்யாக்யானத்தைத் தழுவிய தமிழ்மொழி பெயர்ப்புடனும் கூடியது)

தைத்திரீய ஆரண்யகம்
(அருணம் என்கிற சூரிய நமஸ்காரம்)

(விஞ்ஞான பூர்வமான கருத்துக்கள் அடங்கிய அபூர்வ நூல்.)

ஸ்வல்ப பிரதிகளே அச்சிட்டுள்ளதால் தேவைக்கு முந்தவும்.

ஓர் அரிய வாய்ப்பு

ஜோதிடம் தபாலில் கற்கலாம்

தமிழ் / ENGLISH

தம்முடைய ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான ஜோதிட அனுபவமும் பரம்பரைக் கலைஞானமும் பலருக்கும் பயன்படும் முறையில் தபால் மூலம் ஜோதிடம் கற்பிக்க டாக்டர் கே. என். சரஸ்வதி அவர்கள் ஓர் எளிய முறையை உருவாக்கி இருக்கிறார்: இம்முறையில் ஜோதிடம் பயில 4 மாதங்கள் பிடிக்கும். ஒரே முறையாக எல்லா பாடங்களும் ரெஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்களுடன் வினாத்தாள்களும் சேர்த்து அனுப்பப்படும்.

4 மாத முடிவில் 'கடலங்குடி ஜோதிட ஆராய்ச்சி மையம்' என்ற அமைப்பின் சார்பில் அருமையான Diploma வழங்கப்படும். மாணவர்களுக்கு மட்டும் எங்களுடைய புத்தகங்கள் சலுகை விலையில் தரப்படும்.

அட்மிஷன் பாரத்துக்கும், கட்டணம், பாடத்திட்டம் முதலான எல்லா விவரங்கள் அடங்கிய Prospectus-க்கும் ரூ. 25.00 M. O. செய்யவும். English கோர்ஸுக்கான Prospectus வேண்டுவோர் ரூ. 24-00 M.O. செய்யவும்.

வெளி நாட்டோர் கட்டணம் முதலான எல்லா விவரங்களும் அறிய £ 2 British Postal Order அனுப்புக.

Prospectus-இன் விலையோ, கல்வியின் கட்டணமோ முன்னறிவிப்பின்றி மாற்றப்படலாம். எனவே ரூ. 2/- stamp அனுப்பி விலையைக் கேட்டறிந்து M.O. செய்க.

பின்குறிப்பு : டாக்டர் K. N. S-ன் துல்யமான ஜாதக பலன்கள் 3 to 6 pm வரை பார்க்கப்படும்.

Kadalangudi Astrological
Research Centre
38, Natesa Iyer Street
Madras - 600 017
INDIA

6 முதல் 60 வரை ஓவியம் கற்க ஓர்

அரியவாய்ப்பு (தமிழில் மட்டும்)

Dr. K.N.S. அவர்களுக்கு சிறுவயது முதலே 64 கலைகளில் ஒன்றான ஓவியக் கலையில் அதிக ஈடுபாடு உண்டு. அவரது சிந்தனையில் பல வருடங்களாகவே எளிய முறையில் ஓவியம் தபாலில் கற்பிக்க எண்ணம் இருந்து வந்தது.

பலருக்கும் பயன்படும் முறையில் எந்த வயதினரும் எளிதாக வீட்டிலிருந்தே ஓவியம் வரைய கற்பிக்கும் 5மாத கோர்ஸை தபாலில் கற்க வெளியிட்டுள்ளார். இதில் கோடுகள் மூலம் படம் வரைதல், மனித உருவப்படம் உறுப்புகள் வரைதல், மரம், செடி, கொடி போன்றவை வரைதல், விலங்குகள், கார்டூன்கள், டிசைன்கள், வாஷ் ட்ராயிங், வர்ணம் தீட்டுதல் போன்றவை; விரிவான விளக்கங்கள் கண்கவர் படங்கள் ஐந்து பகுதிகளாகப் பிரித்து அதற்குத்தகுந்த வரை கேள்வித்தாள்களும் அடங்கியுள்ளன

இம்முறையில் ஓவியம் பயில 5 மாதங்கள் பிடிக்கும். ஒரே முறையாக எல்லா பாடங்களும் ரெஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும்.

5 மாத முடிவில் 'கடலங்குடி ஓவிய மையம்' என்ற அமைப்பின் சார்பில் அருமையான Diploma வழங்கப்படும்.

அட்மிஷன் பாரத்துக்கும், கட்டணம் பாடத்திட்டம் முதலான எல்லா விவரங்கள் அடங்கிய Prospectus க்கு ரூ. 20-00 M.O. செய்யவும்.

வெளிநாட்டோர் கட்டணம் முதலான எல்லா விவரங்களும் அறிய £ 2/- British Postal Order Uncrossed ஆக அனுப்புக.

KADALANGUDI ART CENTRE
38, Natesa Iyer Street,
T. Nagar, Madras-600 017.
INDIA